3 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு - தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மருத்துவ மானியக் கோரிக்கையை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்..........

2 நடைமுறைக் கேள்வி

தமிழரசுக் கழக உறுப்பினருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே. ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில், எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நம் எதிரே இருக்கின்ற முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னத்தில் வெற்றி பெற்ற நண்பர் திரு. தியாகராசன் என்பவருக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் தமிழரசு கழகத்தின் சார்பில் இந்த மன்றத்தில் இருக்கிறார் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால், இந்த மன்றத்தில் குடியரசு கட்சியின் சார்பில் இருந்த ஒரே உறுப்பினரான திரு. கே. பி. எஸ். மணிக்கு பின்னால் இடம் ஒதுக்கப்பட்டது. ஆகவே, திரு. தியாகராசன் அவர்களுக்கு எந்த அடிப்படையில் முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உதய சூரியன் சின்னத்தில் வெற்றி பெற்றவர் தியாகராசன் மாத்திரமல்ல. நண்பர் அவர்களும் இந்தச் சின்னத்தில்தான் வெற்றி பெற்றார் என்பதை மறந்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே சோஷலிஸ்டு கட்சியின் சார்பில் திரு. நல்லசிவம் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் ஒருவராக இருந்த நேரத்தில் கூட முன்வரிசையில் அவருக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஒரு சஜஷன் கொடுக்க விரும்புகிறேன். உண்மையாக எதிர்கட்சியிலிருப்பவர்களுக்கு முதல் வரிசையில் இடமும், தோழமை கட்சியைச் சேர்ந்த ஆளுங்கட்சி சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பின் வரிசையில் இடமும் ஒதுக்கப்பட்டால், பின்னால் இருக்கிற உபதலைவர்களுக்கு முன் வரிசைக்கு வர வாய்ப்பிருக்கும். இந்த சஜஷனை தயவு செய்து அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படி யோசிக்கின்ற நேரத்தில், அவர்கள் வேறு கட்சிக்கு போகமாட்டார்கள் என்ற உறுதியை, நம்பிக்கையை தாங்கள் பெற்றால், அந்த அடிப்படையில் யோசிக்கலாம். (கரவொலி)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுவார் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் அதற்கும் பதில் சொல்லவிரும்புகிறேன். இங்கே மன்றத்தில் நாம் சட்டமன்ற கட்சிகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். திராவிட கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியபோது கொள்கைகளை நாங்கள் விட்டுவிட்டுவரவில்லை. இரட்டைக் குழல் துப்பாக்கி என்று சொல்லிவிட்டு வந்தோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாக இரண்டு பேர்கள் முன் வரிசையில் இருக்கிறோம். நானும், எங்களுடைய சட்டமன்ற கட்சியின் துணைத் தலைவர் திருமதி ஜோதி அம்மையார் அவர்களும் இங்கே முன் வரிசையில் இருக்கிறோம். மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற எதிர்க்கட்சி என்ற முறையில் எங்கள் இரண்டு பேருக்கும் முன் வரிசையில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இது மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் உணர்ச்சிகளைப் பாதிக்கிறது என்று அவர்கள் கருதினால், வேறு பக்கம் எங்களுக்கு இடம் கொடுத்தாலும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஜனநாயக முறைப்படி நாங்கள் இங்கே இந்த வரிசையில் இடம் பெற்றிருக்கிறோம். ஒருவேளை எங்களுடைய கட்சி எண்ணிக்கையில் குறைந்து போனாலும், நாங்கள் வேறு பக்கத்திற்குச் செல்ல தயாராக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன் (ஆரவாரம்).

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த இடம் ஒதுக்குவது என்பது தலைவர் அவர்களுக்கே உரித்தான டிஸ்கிரிஷனரி பவராகும். மற்றவர்கள் வேண்டுமானால் ஆலோசனை சொல்ல உரிமை இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாத ஒன்று. இந்த நிலையில், டிஸ்கிரிஷனரி பவரை தலைவரவர்கள் தம்முடைய இஷ்டப் பிரகாரம் உபயோகப்படுத்த வேண்டுமா, அல்லது அதற்கு வரைமுறை, சட்ட திட்டங்கள் வேண்டுமா என்பதை முதலில் முடிவு செய்து கொண்டால், இந்தப் பிரச்சினைக்கு இடம் இருக்காது. விதிமுறைகள் இல்லாத நேரத்தில் இந்த விவாதத்தை இங்கே எழுப்புவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அவர்களே பதில் சொல்லி விட்டார்கள்

திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடம் பிடிப்பதில் விட்டுக்கொடுப்பது என்பது புதுமையாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருக்கின்றது. அந்த முறையில், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் சொன்னதை போல் பேரவைத் தலைவருக்கு டிஸ்கிரிஷனரி பவர் இருக்கிறது என்ற முறையில் அந்த அதிகாரத்தை யாரும் சந்தேகிக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளாவிட்டாலும் கூட, இப்படிப்பட்ட அதிகாரம் இன்றைக்கு அவசியம் இல்லை என்று கூட கருதுகின்றேன். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடுகின்ற நேரத்தில் இதைப்பற்றி விவாதித்து முடிவெடுக்கலாம் என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தியாகராசன் அவர்கள் தமிழரசுக் கழக உறுப்பினர் என்ற முறையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேரவைக்கு வருவதற்கு முன்னாலேயே இதை அறிவித்திருக்கிறார்கள். எனவே, இதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want to refer to a. matter of privilege Under Rule 184 you can waive notice.

MR. DEPUTY SPEAKER : I am rather confused for a moment. How can the Hon. Member raise a privilege matter now without informing the Speaker and giving notice to him ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Under Rule 184, the Speaker can notice. It is an important matter.

MR. DEPUTY SPEAKER : How can it be done all of a sudden ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : After hearing me, the Speaker can waive know how important it is.

MR. DEPUTY SPEAKER : Kindly resume your seat. The Hon. Member wants me to waive notice. I do not know on what point, the Hon. Lady Member is raising the privilege matter. I have not received notice of it. It will be a bad precedent to allow her to raise it now. You please give it to me in writing and let me have some time to consider it.

3. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 17—மருத்துவம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 17—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,29,47,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".